## நீர் வளச் சபை – 2014

நீர் வளச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 42 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்ட 1964 இன் 29 ஆம் இலக்க நீர் வளச் சபை அதிகாரச்சட்டத்தின் 17(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நீர் வளச் சபையின் நிலவரம் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டதென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

மோட்டார் வாகனங்களின் பராமரிப்பு, தொலைபேசிப் பட்டியல் மற்றும் காப்புறுதி கொடுப்பனவுகள் போன்ற ரூபா 11,938,643 ஆன நிர்வாச் செலவினம் ஆராய்ச்சிக் கற்கைகளில் உறிஞ்சப்பட்டிருந்த போதிலும் அத்தகைய செலவினங்களின் உறிஞ்சல் தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகவே, நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்களின் உண்மைத்தன்மை மற்றும் வகைப்படுத்தல் என்பன கணக்காய்வில் மதிப்பிட முடியவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக்குறைபாடுகள்

156 இருப்பு விடயங்கள் தொடர்பில் மீளாய்வாண்டு இறுதியின் போது நடாத்தப்பட்ட பொருட் கணிப்பீட்டுச் சபையால் 75 அலகுகளின் மிகைகள் மற்றும் 287 அலகுகளில் குறைவுகள் அறிக்கையிடப்பட்டன. எவ்வாறாயெனினும், நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

தளபாடங்கள் மற்றும் பொருத்திகள், இயந்திரங்கள், கணனிகள் மற்றும் உபபாகங்கள் போன்ற நிலையான சொத்துக்களின் கொள்வனவிற்காக திறைசேரி மானியங்களை பயன்படுத்துதல் தொடர்பில் மீளாய்வாண்டிற்காகன திறைசேரி கணனி அச்சீட்டு தாளிற்கும் நிதிச் செயலாற்றல் கூற்றிற்கும் இடையில் பின்வரும் இணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

| விடயம் | திறைசேரி கணனி அச்சீட்டு தாளின் படி தொகை | நிதிச் செயலாற்றல் கூற்றின் படி | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| மூலதனச் செலவினம் | 37,790,756 | 26,500,000 | 11,290,756 |
| மூலதன மானியம் | 37,790,756 | 26,500,000 | 11,290,756 |

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்படவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த அறவிட வேண்டிய ரூபா 9,579,799 இல் ரூபா 2,862,851 தொகை ஒரு ஆண்டிற்கும் மேலாக நிலுவையாக இருந்த போதிலும் சபையானது இதனை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையானது 2006 முதல் 2013 வரை பல்வேறு வகையான வேலைகளை மேற்கொள்வதற்கு 30 நிறுவனங்கள் மற்றும் 4 தனிப்பட்டவர்களிடமிருந்து ரூபா 18,952,652 தொகையான மொத்தமான முற்பணங்களை பெற்றிருந்தது. அந்த முற்பணத் தொகைகளில் ரூபா 1,574,106 கூட்டு மொத்தத் தொகை ஒரு ஆண்டிற்கு மேலாக காலங்கடந்த போதிலும் உரிய வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்வேறு வகையான வேலைகளை மேற்கொள்வதற்கு வாடிக்கையாளர்களிடமிருந்து சபையால் பெறப்பட்ட முற்பணங்களில் ரூபா 18,952,652 ஆக தொகை மீளாய்வாண்டு இறுதிவரை தீர்க்கப்படாது இருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

(i) கற்பிட்டி பிரதேச செயலாளர் ‘‘கரபே’’ குடி தண்ணீர் செயற்திட்டத்தின் கீழ் குடி தண்ணீர் கிணறுகளை நிர்மாணிப்பதற்காக 2006 இல் சபைக்கு ரூபா 1,751,358 ஆன முற்பணமொன்றை செலுத்தியிருந்தது. கிணற்று தண்ணீர் உப்பு தன்மையான இருக்கின்ற காரணத்தால், மொத்த தொகையும் திருப்பிச் செலுத்துவதற்கு வாக்குறுதியளித்திந்தது. எவ்வாறாயினும், அதில் ரூபா 1,056,720 தொகை வாக்குறுதியளிக்கப்பட்டவாறு தீர்ப்பனவு செய்யப்படாமல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அவர்களுடைய கடமைகளை மீறியமைக்காக பொறுப்புடைய உத்தியோகத்தர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது.

(ii) ரூபா 113,008 செலுத்த வேண்டியவற்றினை உறுதிப்படுத்துவதற்காக மாகாண செயலாளர் -புத்தளத்திற்கு அனுப்பிய கடிதம் முகவரியிலுள்ள தவறுகாரணமாக திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. ஆகவே, ரூபா 113,008 தொகையான செலுத்த வேண்டியவையின் நம்பகத்தன்மை கணக்காய்வில் ஐயத்திற்கிடமாகவுள்ளது.

(iii) சான்றுபடுத்தலிற்காக அனுப்பிய 35 கடிதங்களில் இருபத்திநான்கு சான்றுபடுத்தல்கள் பெறப்பட்டிருக்காமையை மீளாய்வு செய்கையில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 16,840,458 தொகையான முற்பணத்தின் அறவீட்டுத் தன்மை கணக்காய்வில் ஐயத்திற்கிடமாகவுள்ளது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 9,536,434 மற்றும் ரூபா 15,060,132 தொகையான முறையே வியாபார பெறவேண்டிய மற்றும் சேவை முற்பண மீதிகள் தொடர்பான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்காக கிடைத்திருக்கவில்லை. ஆகவே, அந்த மீதிகளின் நம்பகத்ததன்மை மற்றும் உண்மைத்தன்மை கணக்காய்வில் மதிப்பிட முடியவில்லை.

### 2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களிற்கான தொடர்பு | | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1964 இன் 29 ஆம் நீர் வளச் சபை அதிகாரச்சட்டம் மற்றும் 1999 இன் 42 ஆம் இலக்க திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் மற்றும் 14(2) ஆம் பிரிவு | அதிகாரச்சட்டத்தின் 12 பிரிவில் குறிப்பிட்டப்பட்ட விடயங்களின் ஏதாவாதெரு அல்லது சகலவற்றிலும் சபை ஆலோசனைக் குழு ஆலோசனை வழங்க வேண்டும். சபைக்கான குழுவானது மீளாய்வாண்டின் போது கூடியிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட ஒன்பது ஆராய்ச்சிக் கற்கைகள் அதன் ஆலோசனைக்காக குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. ஆகவே, அவற்றில் ஏற்பட்ட ரூபா 26,500,000 ஆன ஆராய்ச்சிச் செலவினம் நீர் வளச் சபை அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஆலோசனைக் குழுவால் அனுமதிக்கப்படாமை காரணமாக ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(3) ஆம் பிரிவு | 2012 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை வேண்டப்பட்டவாறு பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 யூன் 2 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பிரிவு | பொதுத் திறைசேரியின் செயலாளரிடமிருந்து அங்கீகாரத்தை பெறாமல் 2014 சனவரி தொடக்கம் திசெம்பர் வரை சபையின் தெரிவு செய்யப்பட்ட 17 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 1,716,000 கூட்டுமொத்தத் தொகையான விசேட படிகள் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆந்திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சபையால் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளானது முன்னைய ஆண்டிற்கான ரூபா 46,872,000 ஆன நேரொத்த வரிக்கு முந்திய தேறிய பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 39,063,000 ஆன வரிக்கு முந்திய தேறிய பற்றாக்குறையில் விளைந்திருந்தமையால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 7,809,000 ஆன முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. மீளாய்வாண்டிற்காக ரூபா 31,611,000 ஆல் வருமானத்தின் அதிகரிப்பு இந்த முன்னேற்றத்திற்கான காரணமாயிருந்த பிரதான காரணமாக இருந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

வருடாந்த மதிப்பீடுகள், முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் சபையால் சமர்ப்பிக்கப்பட்ட ஏனைய தகவல்கள் என்பவற்றின் பிரகாரம், சபையால் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகள் மற்றும் ஆராய்ச்சிக் கற்கைகளின் பௌதீக செயலாற்றல் கீழே தரப்பட்டுள்ளன.

| விடயம் / நடவடிக்கை | மதிப்பிடப்பட்ட அலகுகள் | பூர்த்தியாக்கப் பட்ட அலகுகள் | முரண் |
|---|---|---|---|
| | 200 | 322 | 122 |
| குழாய் கிணறுகளின் நிர்மாணம் | 100 | 157 | 57 |
| கைப் பம்புகளின் நிர்மாணம் | 50 | 68 | 18 |
| நீரிறைக்கும் பம்புகளின் பரிசோதனைகளை நடாத்துதல் | 80 | 87 | 7 |
| குழாய் கிணறுகளின் சுத்தப்படுத்தல் | 10 | 36 | 26 |
| தண்ணீர் மாதிரிகளின் பகுப்பாய்வு | 1,000 | 834 | 166 |
| திரண்ட நிதியத்தின் கீழ் அமுலாக்கப்பட்ட விசேட செயற்திட்டம் | | | |
| * அநுராதபுரம் மாவட்டத்தில் தண்ணீர் தரக் கற்கை தண்ணீர் மாதிரிகளின் சேகரிப்பும் பகுப்பாய்வும் | 500 | 261 | 239 |
| புவியியல் அளவை மேற்கொள்ளல் | 30 | 20 | 10 |
| துளைகள் துழையிடுகின்ற பரிசோதனை | 30 | 22 | 18 |
| இறைத்தல் பரிசோதனை உபகரணங்களை கொள்வனவு செய்தல் | 01 | - | 01 |
| இறைக்கின்ற பரிசோதனை மட்டமிடல் மற்றும் அறிக்கையிடல் | 20 | 04 | 16 |
| * தண்ணீர் உற்பத்தியாக்கும் சுகாதார ஆபத்துக்கள் மற்றும் நடாத்தப்படுகின்ற தண்ணீர் சிகிச்சைகள் பற்றி உருவாக்குகின்ற விழிப்புகளில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | | | |
| 3 நாட்கள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | 10 | 07 | 03 |
| தண்ணீர் சுத்திகரிப்புகளை நடாத்துதல் | 06 | 08 | 02 |
| குறைந்த கிரய கிருமி வடிகட்டல் நடாத்துதல் | 150 | 163 | 13 |
| தண்ணீர் வடிகட்டிகளை கொள்வனவு செய்தல் | 25 | 62 | 37 |
| ஒதுக்க ஊடுகசிவு (ஆர்ஓ) பொறிகளை பொருத்துதல் | 08 | 41 | 33 |

| | | | |
|---|---|---|---|
| * கொழும்பிலிருந்து நீர்கொழும்பு வரை விரிவாக்குகின்ற கடற்கரை மணல் நீர்த்தேக்கம் மீதான நீரியல் கற்கை | | | |
| புவியியல் புலனாய்வு | 50 | 28 | 22 |
| ஆழமற்ற துளைகள் துழைத்தல் நிர்மாணம் | 25 | 07 | 18 |
| இறைத்தல் பரிசோதனைகள் | 20 | 26 | 06 |
| கிணறுகளின் மட்டமிடல் | 100 | 78 | 22 |
| தண்ணீர் மாதிரிகளின் சேகரிப்பும் பகுப்பாய்வும் | 200 | 239 | 39 |
| * யாழ்ப்பாண தீப கற்பத்தில் நீலக் கீழ் தண்ணீர் கண்காணிப்பு வலையமைப்பின் அபிவிருத்தி | | | |
| நீரியல் அளவவை | 40 | 31 | 09 |
| பரிசோதனை துளை துழைத்தல் நிர்மாணம் | 40 | 04 | 36 |
| தண்ணீர் மாதிரிகளின் பகுப்பாய்வு | 320 | 144 | 176 |
| இறைத்தல் பரிசோதனைகள் | 50 | 05 | 45 |
| நிலக்கீழ் தண்ணீர் கண்காணிப்பு | 320 | 222 | 98 |
| * மன்னார் மாவட்டத்தில் சுண்ணாம்புக்கல் நீர்த்தேக்கங்களின் நீரியல் கற்கை | | | |
| புவியியல் புலனாய்வு மேற்கொள்ளல் | 30 | 55 | 25 |
| பரிசோதனை துளை துழைத்தல் நிர்மாணம் | 30 | 10 | 20 |
| இறைத்தல் பரிசோதனைகள் மற்றும் கிணறுகளின் மட்டமிடல் | 10 | 60 | 50 |
| தண்ணீர் மாதிரிகளின் பகுப்பாய்வு | 200 | 251 | 51 |
| * வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் கடற்கரை நீரியல் கற்கை | | | |
| புவியியல் அளவை மேற்கொள்ளல் | 20 | 11 | 09 |
| பரிசோதனை துளை துழைத்தல் நிர்மாணம் | 20 | 06 | 14 |
| தண்ணீர் மாதிரிகளின் பகுப்பாய்வு | 50 | 19 | 31 |

| | | | |
|---|---|---|---|
| * இலங்கையின் கடற்கரை நீர்த்தேக்க முறைமையில் காலநிலை மாற்றங்களின் நேரடி மற்றும் மறைமுக தாக்கங்கள் மீதான கற்கை | | | |
| ஆழமற்ற நீர் அளவை மானிகளின் நிர்மாணம் | 30 | 03 | 27 |
| தண்ணீர் மட்ட கண்காணிப்பும் தண்ணீர் மதிரிகளின் பகுப்பாய்வும் | 50 | 40 | 10 |
| * அம்பாறை, குருநாகல், திருகோணமலை, ஹம்பாந்தோட்டை, பொலநறுவை, பதுளை மற்றும் மொனறாகலை மாவட்டங்களில் சீகேடில் நிலவுகின்ற பகுதிகளில் தண்ணீர் தரக் கற்கை | | | |
| பூகோள மற்றும் புவியியல் அளவை மற்றும் பரிசோதனை துளைகளின் துழையிடல் | 30 | 54 | 24 |
| இரசாயன மற்றும் பாரிய இரும்புகளிற்கான தண்ணீர் மாதிகளை சேகரித்தலும் பகுப்பாய்வு செய்தலும் | 300 | 75 | 225 |
| கைப் பம்புகளின் கொள்வனவு | 30 | 20 | 10 |
| கைப் பம்புகளை பொருத்துதல் | 30 | 14 | 16 |
| விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | 01 | - | 01 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ‘‘வறட்சி நிவாரண கிணறு புனரமைப்பு செயற்திட்டத்தால்’’ மீளாய்வாண்டின் போது ரூபா 6,652,000 ஆன வருமானம் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் இந்த நடவடிக்கை மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) நிலக்கீழ் தண்ணீர் அபிவிருத்தி மற்றும் ஆலைகள் தொடர்பில் மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 5,000,000 மற்றும் ரூபா 500,000 ஆன தொகைகள் மதிப்பிடப்பட்ட போதிலும் எவ்வித வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சபையானது ரூபா 5 மில்லியன் கிரயத்தில் நீரிறைத்தல் பரீட்சிப்பு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கும் மதிப்பிட்டிருந்தது. இருந்த போதிலும், எவ்வித அமுலாக்கமும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) சபையானது பாதீட்டு மதிப்பீடுகளில் ஏற்பாடுகள் இல்லாமல் வாடகை கட்டணங்கள், நட்டக் கடன்கள் மற்றும் வறட்சி மீட்பு குழாய் கிணறு புனரமைப்பு செயற்திட்டம் என்பவற்றில் ரூபா 9,518,000 ஆன செலவினத்தை ஏற்படுத்தியிருந்தது.

**4.2 ஆராய்ச்சிக் கற்கைகளின் அமுலாக்கலிலுள்ள நலிவுகள்**

சபையானது தண்ணீர் தரத்தினையும் பொது மக்களிற்கு அதன் தாக்கத்தினை பரீட்சிக்கும் நோக்கில் 2010 முதல் 2014 வரையான ஆண்டுகளின் போது 09 ஆராய்ச்சிக் கற்கைகளை தொடங்கியிருந்ததுடன் இந்த நோக்கத்திற்காக 2014 ஆம் ஆண்டிற்காக செய்யப்பட்ட ரூபா 44,000,000 தொகையான மொத்த ஏற்பாடுகளில், ஆராய்ச்சிக் கற்கைகளை மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 25,527,000 அல்லது 58 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | ஆராய்ச்சிக் கற்கையின் பெயர் | மதிப்பிடப்ட்ட கிரயம் | தொடங்கிய திகதி | பூர்த்தியாக்க வேண்டிய திகதி | ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட செலவினம் | ஆண்டின் போதான உள்ளபடியான செலவினம் | 2014 திசெம்பர் 31 வரை திரண்ட செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | அநுராபுரம் மாவட்டத்திலுள்ள மக்களிற்கு சுகாதார பிரச்சனைகள் காரணமாக தலைதூக்குகின்ற தண்ணீர் கொண்டிருக்கின்ற தாதுப்பொருள் ஆபத்துக்களுடன் வலயங்களின் இனங்காணல் | 23,632,000 | 2010 யூன் | 2011.12.31 | 8,000,0000 | 4,735,000 | 15,880,990 |
| (ii) | கொழும்பிலிருந்து நீர்கொழும்பு வரை விரிவாக்குகின்ற கடற்கரை மணல் நீர்த்தேக்கம் மீதான நீரியல் கற்கை | 127,000,000 | 2010 யூலை | 2012.1231. | 7,200,000 | 3,125,000 | 21,523,539 |
| (iii) | யாழ்ப்பாண தீப கற்பத்தில் நிலக் கீழ் தண்ணீர் மதிப்பீடும் நீலக் கீழ் தண்ணீர் கண்காணிப்பு வலையமைப்பின் அபிவிருத்தியும் | 36,500,000 | 2012 சனவரி | 2014.12.31 | 8,000,000 | 2,989,000 | 5,143,000 |
| (iv) | மன்னார் மாவட்டத்தின் சுண்ணாம்புக்கல் நீர்த்தேக்கங்களின் நீரியல் கற்கை- தண்ணீர் துறை | 28,800,000 | 2012 சனவரி | 2013.12.31 | - | - | 4,462,000 |
| (v) | மன்னார் மாவட்டத்தின் சுண்ணாம்புக்கல் நீர்த்தேக்கங்களின் நீரியல் கற்கை- வறட்சியை குறைத்தல் | 9,000,000 | 2014 சனவரி | 2014.12.31 | 9,000,000 | 3,933,000 | 3,933,000 |
| (vi) | வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் கடற்கரை நீரியல் கற்கை | 77,950,000 | 2013 சனவரி | 2015.12.31 | 7,200,000 | 2,496,000 | 3,085,000 |
| (vii) | இலங்கையின் கடற்கரை நீர்த்தேக்க முறைமையில் காலநிலை மாற்றங்களின் நேரடி மற்றும் மறைமுக தாக்கங்கள் மீதான கற்கை | 16,000,000 | 2013 சனவரி | 2015.1231. | 1,500,000 | 1,178,000 | 1,381,000 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **(viii)** | அம்பாறை, குருநாகல், திருகோணமலை, ஹம்பாந்தோட்டை, பொலநறுவை, பதுளை மற்றும் மொனறாகலை மாவட்டங்களில் சீகேடியூ நிலவுகின்ற பகுதிகளில் தண்ணீர் தரக் கற்கை | 12,000,000 | 2014 சனவரி | 2015.12.31 | 6,000,000 | 5,821,000 | 5,821,000 |
| **(ix)** | இலங்கையில் நிலக்கீழ் நீர் மீள் நிரப்பலிற்காக பொருத்தமான பகுதிகளை இனங்காணல் 1- புத்தளம் மாவட்டம் | 6,000,000 | 2014 சனவரி | 2015.12.31 | 3,000,000 | 1,250,000 | 1,250,000 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) **ஆராய்ச்சிக் கற்கைகளின் அமுலாக்கலிலுள்ள பொதுவாக குறைபாடுகள்**

(i) முழு நேர ஆராய்ச்சி உத்தியோகத்தர் அதன் வெற்றிகரமான பூர்த்தியாக்கலிற்காக ஆராய்ச்சிக் கற்கையொன்றிற்கு நியமிக்கப்பட வேண்டிய போதிலும், முழு நேர ஆராய்ச்சி உத்தியோகத்தர் சபையால் மீளாய்வாண்டின் போது அமுலாக்கப்பட்ட எந்தவொரு ஆராய்ச்சிக் கற்கைகளிற்கும் இணைக்கப்பட்டிருக்கவில்லை. சபையின் பொது முகாமையாளர் சகல கற்கைகளிற்காகவும் ஆராய்ச்சி உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டிருந்தார். ஆகவே, அந்த கற்கைகள் பட்டியலிடப்பட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ii) அந்த ஆராய்ச்சிக் கற்கைகள் ஆற்றலுடைய மற்றும் அனுபவமுடைய ஆராய்ச்சி உத்தியோகத்தர்களால் மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. .

(iii) ஆராய்ச்சிக் கற்கைக்கு இணைக்கப்பட்ட அந்த ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் பெயர்கள் ஒவ்வொரு உத்தியோகத்தருக்காகவும் ஒதுக்கப்பட்ட மனித நாட்களின் எண்ணிக்கை என்பன ஆராய்ச்சிப் பிரேரணைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) ஒவ்வொரு செயற்திட்டத்தினதும் திரண்ட செலவினம் மற்றும் பௌதீக முன்னேற்றம் செயற்திட்டக் காலப்பகுதி நீடிக்கின்ற வரை காட்டப்பட்டிருக்கவில்லை.

(v) ஒவ்வொரு ஆராய்ச்சி நடவடிக்கைக்குமான விரிவான செலவினம் ஆராய்ச்சிப் பிரேரணைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) பிரேரணைகளின் பிரகாரம் ஒவ்வொரு ஆராய்ச்சிக்குமான பொறுப்புக்கள் சபையின் பொது முகாமையாளருக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. ஆராய்ச்சிக் கற்கைகளின் இந்த வகையின் போதிய கண்காணிப்பு மற்றும் வெற்றிகரமான பூர்த்தியாக்கல் என்பன நிர்வாகம் மற்றும் அவருக்கு ஒதுக்கப்பட்ட ஏனைய கடமைகள் என்பவற்றுடன் பொது முகாமையாளருக்கு சாத்தியமற்றிருந்தது.

(ஆ) கொழும்பு தொடக்கம் நீர்கொழும்பு வரை விரிவாக்குகின்ற நீர்த்தேக்க கடற்கரை கற்கைகள் மீதான நீரியல் ஆய்வு

(i) 2010 யூலையிலிருந்து இரண்டரை ஆண்டுகளிற்குள் அல்லது 2012 திசெம்பர் வரை ஆராய்ச்சிக் கற்கை பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் இது மீளாய்வாண்டு இறுதிவரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த வழமைக்கு மாறான தாமதங்களிற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆராய்ச்சி பிரேரணைகளின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான ஆராய்ச்சிக் கற்கைகளின் மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 4.5 மில்லியனானதுடன் ஆராய்ச்சிப் பிரேரணைகளை கருத்திற்கொள்ளாமல் பாதீட்டில் ரூபா 7.2 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது.

(iii) 2010 தொடக்கம் 2014 ஆம் வரையான காலத்திற்காக இந்த ஆராய்ச்சிக் கற்கைக்காக மொத்த மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 145.95 மில்லியனாக இருந்த போதிலும் ஆராய்ச்சிக் கற்கைகளில் ஈடுபடுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் மனித நாட்களின் எண்ணிக்கை மற்றும் பதவிகள்

---

போன்ற வேண்டப்பட்ட விபரங்கள் பிரேரணையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) மாதிரி நிலக் கீழ் நீரின் அபிவிருத்திக்காக ரூபா 12 மில்லியன் மொத்த மதிப்பிடப்பட்ட செலவினம் ஆரம்ப பிரேரணையில் உள்ளடக்கப்பட்டதுடன் இது ஆராய்ச்சியை விரிவாக்கும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 0.2 மில்லியன் வரை குறைவடைந்திருந்ததுடன் எதிராக 2014 ஆம் ஆண்டில் ரூபா 1 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், அந்த மாற்றங்களிற்கான தெளிவான செலவினம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(v) ஆராய்ச்சிக் கற்கை நீடிக்கப்பட்ட போது 2014 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட திருத்தப்பட்ட பிரேரணையில் நிதி முன்னேற்றம் மற்றும் பௌதீக முன்னேற்றம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) 2014 திசெம்பர் 31 அளவில் ஆராய்ச்சிகளின் மொத்தச் செலவினம் ரூபா 21,523,539 ஆக இருந்தது. அது மதிப்பிடப்பட்ட மொத்த செலவினத்தின் 17 சதவீதமாக இருந்தது. இதன்படி, ஆராய்ச்சிக் கற்கைகளின் நிதி முன்னேற்றம் நம்பகமற்ற திட்டமிடல் காரணமாக திருப்தியற்ற மட்டத்தில் இருந்தது. மேலும் 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா 8 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்துடன் பிரேரணையொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

(vii) ஆராய்ச்சிக் கற்கைகளின் தொடக்கத்திலிருந்து சபையின் உதவி பொது முகாமையாளருக்கு பொறுப்புக்கள் ஒதுக்கப்பட்டிருந்தது ஆராய்ச்சியை நீடிக்கின்ற அதேநேரம் சகல பொறுப்புக்களும் எந்தவொரு ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணம் இல்லாமல் பொது முகாமையாளருக்கு மாற்றப்பட்டிருந்தது.

(viii) ஆராய்ச்சிக் கற்கையின் 6 குறிப்பிடப்பட்ட நோக்கங்களில் நீர்த்தேக்கத்திற்கு மீள் நிரப்பலின் அளவு மற்றும் கற்கை பகுதிக்குள் மண் தேக்கத்திலிருந்து பிரித்தெடுப்பதற்கு எல்லைகள் வரையறுப்பதற்கு சட்ட விடயங்கள் காரணமாக 2014 ஆம் ஆண்டில் விடுபட்டிருந்தது.

(இ) யாழ்ப்பாணம் தீபகற்பத்திற்காக நிலக்கீழ் நீர் மதிப்பீடும் நிலக் கீழ் நீர் கண்காணிப்பு வலையமைப்பின் அபிவிருத்தியும்

---

(i) 2014 ஆம் ஆண்டு இறுதியளவில் பட்டியலிடப்பட்டவாறு ஆராய்ச்சிக் கற்கையானது பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிற்காக மதிப்பிடப்பட்ட செலவினம் மற்றும் நடவடிக்கைகள் ஆரம்ப பிரேரணையில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டிற்கான அவற்றின் மீதான தகவல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2015 வரை நீடிக்கப்பட்ட போது ஆராய்ச்சி பிரேரணையில் நிதி முன்னேற்றம் மற்றும் பௌதீக முன்னேற்றம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) கட்டிட நிர்மாணங்கள், அலுவலக தளபாடம், இயந்திரம், கணனிகள் மற்றும் உப பாகங்களின் கொள்வனவில் ரூபா 23 மில்லியன் தொகை ஏற்பட வேண்டுமென எதிர்பாரக்கப்பட்ட சபையின் மூலதன செலவினம் இந்த ஆராய்ச்சிக் கற்கையின் செவலினமாக கருதப்பட்டிருந்தது.

(ஈ) மன்னார் மாவட்டத்தில் சுண்ணாம்புக் கல் நீர்தேக்கத்தில் நீரியல் கற்கை – வறட்சிக் குறைப்பு

---

(i) 2014 ஆம் ஆண்டு இறுதி வரையும் பட்டியலிடப்பட்டவாறு கற்கை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தாமதத்திற்கான காரணம் வழங்கப்பட்டிருக்கவில்லை

(iii) சபையானது ஆராய்ச்சிக் கற்கையை 2015 வரை தொடர்ந்திருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டிற்காக திருத்தப்பட்ட செயற்திட்ட பிரேரணையை சமர்ப்பிப்பதற்கு தவறியிருந்தது.

(iv) பிரேரணையின் பிரகாரம், சபையின் பொது முகாமையாளருக்கு ஆராய்ச்சிப் பொறுப்புக்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவருக்கு நாளுக்கு நாள் வேலைப் பளு காரணமாக பொது முகாமையாளருக்கு இந்த ஆராய்ச்சி வழியின் கண்காணிப்பு மற்றும் வெற்றிகரமான பூர்த்தியாக்கல் உள்ளது.

(v) மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட ரூபா 3,933,000 ஆன மொத்த செலவினம் பட்டியலிடப்பட்டவாறு ஆராய்ச்சிக் கற்கை பூர்த்தியாக்கப்படாமை காரணமாக பயனற்றவையாக இருந்தது.

(vi) மீளாய்வாண்டிற்கான கற்கையின் மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 9,000,000 ஆக இருந்த போதிலும், அவற்றில் ஏற்பட்ட பாதீட்டு ஏற்பாடு ரூபா 7,100,000 மாத்திரமேயாகும்.

(உ) மன்னார் மாவட்டத்தில் சுண்ணாம்புக் கல் நீர்தேக்கத்தில் நீரியல் கற்கை – நீர் துறை

2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது மேற்குறிப்பிட்ட ஆராய்ச்சிகளில் ஏற்பட்ட ரூபா 4,462,000 ஆன மொத்தச் செலவினம் பட்டியலிடப்பட்டவாறு ஆராய்ச்சியின் பூர்த்தியாக்கப்படாமை மற்றும் ஆராய்ச்சி அறிக்கை கிடைக்காமை என்பன காரணமாக பயனற்றதாக இருந்தது.

(ஊ) இலங்கையில் கடற்கரை நீர் தேக்க முறைமையில் காலநிலை மாற்றங்களின் சாத்தியமான நேரடி மற்றும் மறைமுகத் தாக்கங்கள் மீதான கற்கை

(i) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்காக ஆராய்ச்சி கற்கைகளின் எதிர்பார்க்கப்பட்ட செலவினம் ரூபா 13,500,000 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான செலவினம் ரூபா 1,381,000 ஆக இருந்தது. எனவே, நிதி முன்னேற்றம் 10 சதவீதமாக மாத்திரம் இருந்தது. மேலும், சபையானது பட்டியலிடப்பட்டவாறு ஆராய்ச்சிக் கற்கையை பூர்த்தியாக்குவதற்கு பயனுள்ள அளவீடுகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பொது முகாமையாளருக்கு ஆராய்ச்சிப் பொறுப்புக்கள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் சபையால் அவருக்கு ஒதுக்கப்பட்ட கடமைகள் நாளுக்கு நாள் வேலைப் பளு காரணமாக பொது முகாமையாளருக்கு இந்த ஆராய்ச்சி வழியின் முன்னேற்றம் மற்றும் வெற்றிகரமான பூர்த்தியாக்கல் மிகவும் நலிவான மட்டத்தில் இருந்தது.

(எ) அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள மக்களின் சுகாதார பிரச்சனைகளிற்கு தலையாயிருந்த தண்ணீர் கொண்டிருக்கின்ற தாதுப் பொருட்கள் ஆபத்துகளுடன் வலயத்தினை இனங்காணல்

(i) 2011 நவம்பர் இறுதியளவில் அல்லது 2010 யூனிலிருந்து 18 மாதங்களிற்குள் இந்த ஆராயச்சி கற்கை பூர்த்தியாக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் இது முறையற்ற திட்மிடல் காரணமாக 2014 இறுதி வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆராய்ச்சிப் பிரேரணைகளின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கற்கையின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 6,300,000 ஆக இருந்த போதிலும் ஆராய்ச்சிப்

பிரேரணைகளை கருத்திற்கொள்ளாமல் கற்கைக்கான சபையின் பாதீட்டில் ரூபா 8,000,0000 தொகை ஒதுக்கப்பட்டிருந்தது.

(iii) ஆரம்ப ஆராய்ச்சி பிரேரணைகளில் உள்ளடக்கப்பட்டிருக்காத பின்வரும் 3 புதிய நடவடிக்கைகள் முறையற்ற திட்டமிடல் காரணமாக 2012 இல் உள்ளடக்கப்பட்டிருந்தது.

நீரியல் புலனாய்வுகளை நடாத்துதல்
துளையிடல் பரீட்சிப்புக்களை நிர்மாணித்தல்
இறைத்தல் பரீட்சிப்புக்களை நடாத்துதல்

(iv) 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ஆராய்ச்சிப் பிரேரணைகள் நீடிக்கப்பட்டிருந்த போது அதற்கு கற்கையின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

(v) ஆரம்ப ஆராய்ச்சிப் பிரேரணைகளில் 300 தண்ணீர் மாதிரிகள் சேகரித்தல் மற்றும் பகுப்பாய்விற்காக ரூபா 19,800,000 ஆன தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2012 இல் ஆராய்ச்சிக் கற்கைக்கான விரிவாக்கலில் இந்த தொகை ரூபா 1,000,000 வரை குறைக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் இது 2013 ஆம் ஆண்டில் ரூபா 500,000 இற்கு குறைக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டில் ரூபா 350,000 தொகை மாத்திரம் 400 தண்ணீர் மாதிரிகள் சேகரித்தல் மற்றும் பகுப்பாய்விற்றகாக ஒதுக்கப்பட்டிருந்தமையால், மதிப்பீட்டில் நலிவுகள் உள்ளதென்பதைக் குறிக்கின்றது.

(vi) ஆரம்பத்தில் சபையின் உதவி பொது முகாமையாளருக்கு (நீரியல்) ஆராய்ச்சியின் பொறுப்புக்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2014 இல் ஆராய்ச்சி காலப்பகுதி நீடிக்கப்பட்ட போது ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட மனித நாட்களின் எண்ணிக்கை மற்றும் ஆராய்ச்சிகளின் முன்னேற்றம் என்பதைக் குறிப்பிடாமல் பொது முகாமையாளருக்கு பொறுப்புக்கள் மாற்றப்பட்டது. ஆகவே, ஆராய்ச்சி பட்டியலிடப்பட்டவாறு அமுலாக்கப்பட்டிருந்ததா எனப் பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது.

(vii) ஆராய்ச்சிப் பிரேரணைகளின் பிரகாரம், கற்கையின் பிரதான நோக்கம் குடிதண்ணீர் வளங்களை பாதித்த மாசடைதல் காரணமாக நோய் தாக்க சாத்தியம் நிர்ணயிப்பதற்கும் அதிகளவான ஆபத்துக்கள் மற்றும் பிராந்தியத்திற்தில் தன்னார்வ வலயங்கள் இனங்காண்பதற்கும் உள்ளன. மேலும், செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கங்கள் அநுராதபுர பகுதியிலுள்ள மக்களிற்கு தரமான குடிக்கக்கூடிய தண்ணீர் வளங்களை அறிமுகப்படுவதற்கும் தண்ணீர் தொடர்புபட்ட நோய்களிலிருந்து அவர்களை பாதுகாப்பதற்குமாக இருந்தது. ஆனால், சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி அறிக்கைகளோ அல்லது தன்னார்வமற்ற வலய ஆபத்துக்கள் தண்ணீர் தொடர்புபட்ட நோய்களிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கு வழங்கப்பட்ட சிபார்சுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. எனவே, ரூபா 15,888,990 தொகை செலவழிப்பதன் மூலம் 4 ஆண்டுகள் முழுவதும் அமுலாக்கப்பட்ட ஆராய்ச்சி மாவட்டத்தின் மக்களிற்கு நேரடி நன்மைகளை செய்வதற்கு தவறியிருந்தது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(vii) ஆராய்ச்சிக் கற்கைகளிற்காக ஏற்பட்ட ரூபா 15,888,990 தொகையான மொத்தச் செலவினம் ரூபா 23,632,000 ஆன மதிப்பிடப்பட்ட செலவினத்தில் 67 சதவீதமாக இருந்தது. எனவே, எதிர்பார்க்கப்பட்ட நிதி முன்னேற்றம் நம்பகமற்ற திட்டமிடல் காரணமாக அடைய முடியாதிருந்தது.

(ஏ) தண்ணீர் சம்பந்தப்பட்ட சுகாதார ஆபத்துக்கள் மற்றும் நீர் வளங்களின் நிலைபேறான தோண்டல் என்பவற்றினை குறைப்பதற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கல்

(i) விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தல் மற்றும் பொருட்களை விநியோகிக்கும் நோக்கில் நீர் வளச் சபை அதிகாரச்சட்டத்தில் சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையின் செயல் நடவடிக்கை திட்டத்திற்கு செயற்திட்டத்தின் இந்த வழி உள்ளடக்குதல் மற்றும் அவற்றில் செலவினம் ஏற்படுதல் சபையின் நோக்கத்திற்கு முரண்பட்டதாக உள்ளது.

(iii) செயற்திட்டத்தின் செலவினம் புறம்பாக காட்டுவதற்கு பதிலாக, மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட ரூபா 199,443 ஆன மொத்தச் செலவினம் அநுராதபுரம் மாவட்டத்தில் நடாத்தப்பட்ட ஆராய்ச்சிக் கற்கைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) இலங்கையில் நீலக் கீழ் நீர் மீள்நிரப்பலிற்காக பொருத்தமான பகுதிகளின் இனங்காணல்- கட்டம் 1- புத்தளம் மாவட்டம்

திருப்திகரமற்ற நிதிசார் செயலாற்றல் மீளாய்வாண்டிற்காக அறிக்கையிடப்பட்ட நிதி முன்னேற்றம் 42 சதவீதம் மாத்திரமேயாகும்.

(ஒ) வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நீரியல் வளக் கற்கை

(i) உண்மைய செலவினத்திற்கு அவதானிக்கப்பட்ட திருப்திகரமற்ற நிதி முன்னேற்றம் மதிப்பிடப்பட்ட செலவினத்தில் 32 சதவீதம் மாத்திரமேயாகும்.

(ii) 2013 ஆம் ஆண்டின் இறுதியில் நிதி முன்னேற்றம் 2014 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி பிரேரணைகளை விரிவாக்கும் நிகழ்வுகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

**4.3 முகாமைத்துவ திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அசையாச் சொத்துக்கள் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் களஞ்சியங்களில் ரூபா 70,974,126 பெறுமதியான பழுதடைந்த இருப்புக்கள் இருந்தது.

(ஆ) நிதிநிலைமை கூற்றில் காட்டப்பட்ட ரூபா 70,113,000 கூட்டு மொத்தத் தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் போதிய தகவல்கள் கிடைக்காமை காரணமாக வருடாந்த கணிப்பீட்டுச் சபை அறிக்கைகளுடன் சேர்த்து ஒப்பீடு செய்ய முடியவில்லை.

(இ) மூலதன செலவினங்களிற்காக 152- நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் கீழ் ரூபா 45,000,000 ஆன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 37,790,755 ஆன தொகை அல்லது 84 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) நோக்கங்களை அடைதல்

சபையானது 1999 இன் 42 ஆம் இலக்க நீர் வளச் சபை (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு பின்வரும் நோக்கங்களை அடைவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) நாட்டின் நீர் வளங்களின் கட்டுப்பாட்டு பிரமாணம் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு (பாதுகாப்பு மற்றும் பயன்பாடு உள்ளடங்கலாக)

(ii) ஆறுகள், வெள்ளம் மற்றும் வேறு நீர் வளங்களின் மாசடைதலை பாதுகாப்பதற்கு

(iii) பின்வரும் நோக்கங்களுடன் நாட்டின் நீர் வளங்களின் கட்டுப்பாடு மற்றும் பயன்பாடு தொடர்பில் தேசிய கொள்கைகளை வடிவமைத்தல்.

- ❖ நீர் வளங்களின் பல நோக்க அபிவிருத்தி மற்றும் பயன்பாடு
- ❖ நாட்டின் வழங்கல்கள் மற்றும் கைத்தொழில் வழங்கல்கள் என்பவற்றிற்காக நீர் வளங்களின் குறுகிய கால மற்றும் நீண்டகால ஏற்பாடு
- ❖ உப்புத் தன்மையின் கட்டுப்பாடு

(iv) நாட்டின் நிலக் கீழ் நீர் வளங்களின் பாதுகாப்பு, பயன்பாடு, கட்டுப்பாடு மற்றும் அபிவிருத்தி என்பவற்றிற்காக விரிவான மற்றும் ஒன்றிணைந்த திட்டங்களை தயாரித்தல்.

(v) நீரியல் தொடர்பில் அடிப்படை தரவுகள் மற்றும் ஏனைய புலனாய்வுகளின் அளவீட்டிற்கு அரசாங்க நிறுவனங்கள், உள்ளூராட்சி அதிகாரசபைகள் மற்றும் பொதுக் கூட்டுத்தாபனங்கள் என்பவற்றின் நடவடிக்கைகளை இணைப்பதற்கு.

(vi) அரசாங்க நிறுவனங்கள், உள்ளூராட்சி அதிகாரசபைகள் மற்றும் பொதுக் கூட்டுத்தாபனங்கள் என்பவற்றால் செய்யப்பட்ட நாட்டின் நிலக் கீழ் நீர் வளங்கள் தொடர்பில் புலனாய்வுகள், புள்ளிவிபர அளவீடு, திட்டங்கள் மற்றும் பிரேரணைகள் என்பவற்றின் அடிப்படையில் அறிக்கைகளை பகுப்பாய்வு செய்தல்.

(vii) நாட்டின் பூமிக்கு அடியிலான நீர் வளங்களின் பாதுகாப்பு, பயன்பாடு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் அரசாங்க நிறுவனங்கள், உள்ளூராட்சி அதிகாரசபைகள் மற்றும் பொதுக் கூட்டுத்தாபனங்கள் என்பவற்றால் பொறுப்பேற்றப்பட்ட செயற்திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அத்தகைய செயற்திட்டங்களின் சாத்தியங்கள், நலன்கள் மற்றும் பொருளாதார சாத்தியத்தன்மை என்பவற்றின் மதிப்பீடு.

(உ) அசையா சொத்துக்களின் கீழான நிதிக்கூற்றுக்களில் ஐந்து மோட்டார் வாகனங்கள் காட்டப்பட்டிருந்த போதிலும் சட்ட உரிமையாண்மை பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், 2014 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட கணிப்பீட்டுச் சபை மூலம் அந்த வாகனங்களின் உள்ளதன்மை மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகவே, அந்த வாகனங்களின் தவறான பிரயோகங்களின் சாத்தியத்தன்மை கணக்காய்வில் ஐயத்திற்கிடமாக உள்ளது.

## 4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்வேறு வகையான வேலைகளை செய்து முடிப்பதற்கு 25 வாடிக்கையாளர்களால் ரூபா 5,463,608 கூட்டு மொத்தத் தொகையான சேவை முற்பணங்கள் அவர்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் சபையால் பதிவழிக்கப்பட்டிருந்தது. மேலும், சபையானது 21 வாடிக்கையாளர்கள் தொடர்பில் உரிய கோவைகளை சமர்ப்பிப்பதற்கு தவறியிருந்ததுடக் அவற்றில் அந்த பதிவழிக்கப்பட்டவை தொடர்பில் கணக்காய்வில் நிகழத்தக்கவைகள் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மன்னார் மாவட்டத்தில் சுண்ணாம்புக் கல் நீர் தேக்கங்களில் நீரியல் கற்கைகளிலிருந்து அநுராதபுரம்- நீர்த்தேக்க முறைமையில் தண்ணீர் தர மாற்றங்களில் கற்கைகளுக்கு மற்றும் குறித்த காரணம் இல்லாமல் செயற்கை முறையில் மீள்நிரப்பல் செயற்திட்டம் (கட்டம் 1 புத்தளம்) ரூபா 335,701 ஆன மொத்தச் செலவினம் மாற்றப்பட்டிருந்தது.

(இ) ''வரட்சி நிவாரண குழாய் கிணறுகள் புனரமைப்பு செயற்திட்டத்திற்காக'' நீர்ப்பாசன மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சிடமிருந்து ரூபா 6,652,000 ஆன தொகை பெறப்பட்டிருந்த போதிலும் இந்த நோக்கத்திற்காக ரூபா 676,000 ஐ விஞ்சி ரூபா 7,328,000 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

**4.5 ஓய்வுபெறல் நலன்புரிக்காக நிதியமொன்று உருவாக்கல்**

பணிக்கொடைக் கொடுப்பனவிற்காக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் நிதிக்கூற்றில் ரூபா 79,706,000 ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் எதிர்கால தேவைகளை செய்வதற்கு ரூபா 7,688,000 தொகை மாத்திரம் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

**5. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டின் போது உள்ளக கணக்காய்வுப் பிரிவால் 12 உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் அந்த கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையில் பல முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது சிறந்த முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் குறிக்கின்றது.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) பெறவேண்டியவைகளும் செலுத்த வேண்டியவைகளும்
(உ) ஆராய்ச்சிக் கற்கைகள் நடாத்துதல்